உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௰.] சுபானு-ஹு ஐப்பசி மீ [பகுதி-௧௨.

Vol. 40. October–November 1943. No. 12.

உள்ளுறை.

சிலப்பதிகார வழக்க வொழுக்கங்கள்:— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்துவான். மு. இராகவையங்காரவர்கள். ௩௭௯—௩௮௮

கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்:)— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. ௩௮௯—௪௱௪

பிழைதிருத்தம்:— ௪௱௪

பண்டைத்தமிழர்:— } சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர். ௪௱௫—௪௧௰

மதிப்புரை:— ௪௧௧

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:— ௪௧௨

செந்தமிழ் நாற்பதாந்தொகுதியின் உள்ளுறை முதலியன:— 1—4

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1943.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.	ரூ.	அ.	பை.
1. ஞானாமிர்த மூலமும் உரையும் ...	1	0	0
2. சைவமஞ்சரி	1	8	0
3. *யாப்பணியிலக்கணங்கள்			
4. வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5. பன்னூற்றிரட்டு	3	0	0
6. மகாபாரதம் அரும்பதவுரையுடன் ...	4	0	0
7. *தோத்திரத்திரட்டு			
8. * தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்	6	0	0
* ஷை இரண்டாம்பாகம் ...	4	8	0
ஷை மூன்றாம்பாகம் ...	5	0	0
9. *அபிதானசிந்தாமணி			
10. தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
11. திருவருணைக்கலம்பகம்	0	6	0
12. *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ...			
13. கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
14. *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15. திருவாரூர் நான்மணிமாலை ...	0	4	0
16. ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ...	1	4	0
பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0
திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—சம.] சுபானு-ஹு ஐப்பசிமீ [பகுதி—கஉ.

Vol. 40. October–November 1943. No. 12.

சிலப்பதிகார வழக்கவொழுக்கங்கள்*

[ராவ்ஸாஹிப். வித்வான். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்.]

தமிழ்மொழியின் அணிகலன்கள் எனப்படும் பஞ்சகாவியங்களிலே, காலத்தாலும் சுவைமிகுதியாலும் தலைமைபெற்றுவிளங்குவது சிலப்பதிகாரம். இது, சேரமுனிவரான இளங்கோவடிகளால் அருளிச்செய்யப்பட்டது. தமிழ்நாட்டின்சரிதமாய், முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய இத்தமிழகத்துக்குச் சிறந்ததொரு தனிப்பேரிலக்கியமாகப் போற்றப்படுவது.

இக்காப்பியம் கூறும் கோவலன் கண்ணகிகளின் வரலாறு, யாவரும் நன்கறிந்ததாதலால், அதனை இங்கே நான் கூறவரவில்லை. ஆனால் நம் நாட்டின் ஆதி வழக்கவொழுக்கங்களாக இந்நூலினின்று அறியப்படவேண்டியவை பல உண்டு. அவற்றுள் முக்கியமான சிலவற்றையே இப்போது எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

நாட்டு வழக்கவொழுக்கங்கள் என்பன அதன் மக்களைச் சார்ந்தவையாதலால் தமிழ்மக்கள் எனப்படுவோர், குறிஞ்சிமுதலிய ஐவகைநிலப்பகுதிகட்கும் நால்வகைவருணங்கட்கும் உரியவராவர். தொல்காப்பியமும் சங்கநூல்களும் இவ்விருவகையினர்க்கன்றி ஏனைமக்களுக்கு இந்நாட்டுரிமை கொடுக்கவில்லை. இவருள்

* 6—8—43-ல் திருச்சி 'அகில இந்தியரேடியோ' மூலம் ஒலிபரப்பப்பெற்ற இஃது அநுமதியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

ஐந்திணைமக்களும்—குன்றக்குறவர், ஆயர், எயினர், உழவர், பரவர் என்ற பெயர்களுடன் மலைமுதல் கடல் அளவும் பரவியிருந்தவர். இவர்கள் பெரும்பாலும் நாட்டுப்புறவாசிகளே. நகரப்பகுதிகளிலே, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நான்குவருணத்தவரும் மிகுதியாக வாழ்ந்தனர்.

இவர்களுள், ஐந்திணைக்குடிமக்களின் அரிய உழைப்பால் உண்டான பயனே தேசத்தின் இயற்கைச்செல்வங்களாகும். வேதமும்—இம்மக்களை பஞ்சக்ஷிதீமானுஷர் என்றும், இவர் படைத்த வளங்களை பஞ்சக்ஷிதீநாம்வஸு என்றும் கூறும் என்பர் அறிஞர். இந்நிலங்களையும் மக்களையும் செல்வங்களையும் நெறிப்பட அமைத்துப் பேணுதற்கு, அறிவமைதியும் ஆட்சிச்சிறப்பும் பண்டமாற்றமும் பல்வகைத் தொழில்களும் அவசியமன்றோ? இவற்றை முறைப்படி புரிவோர்களே நால்வகைவருணத்தவரும்.

குடிமக்களும் தலைமக்களுமான இவரெல்லாம், தெய்வபக்தியும் தேசாபிமானமும் குலதர்மங்குன்றாமையும் உடையவர்கள். இவரது தெய்வபக்தியை முதலில் நோக்குவோம். முருகக்கடவுளும் திருமாலும் பகவதியும் இந்திரனும் வருணனும் முறையே இவ் வைந்திணைமக்களாலும் வழிபடப்பட்ட தெய்வங்கள். இருவினையும் மறுபிறப்பும் உண்டென்ற கொள்கை இவர்களிடம் வேரூன்றியிருந்தது. தலைமக்கள் வாழும் நகரங்களிலே மேற்கூறிய தெய்வங்களோடு சிவபிரான், பலதேவர், சந்திரன், சூரியன், சாத்தன் முதலிய தெய்வவழிபாடுகளும் மலிந்திருந்தன. மதுராபதி சம்பாபதி போன்ற நகர அதிதேவதைகளும் இம்மக்களால் வழிபடப்பெற்றனர். இராமபிரான் தன்னுடைச்சோதியடைந்தபின், அயோத்யாதேவதையானவள் இரவில் குசனிடம் சென்றதாகக் காளிதாசர் கூறுதலும் இங்கே ஒப்பிடத்தகும். இத்தெய்வங்கட்கெல்லாம் விக்கிரகங்களும் கோயில்களும் விழாக்களும் அமைந்து நடந்தன. இந்திரவிழா, புகாரில் நடந்தேறிய விமரிசையை நாம் நன்கறிவோம். இந்த இந்திரவணக்கமும், சந்திர சூரிய பலதேவர் வணக்கங்களும் பல நூற்றாண்டுகட்குமுன்பே வழக்கற்றுப் போயின.

சைவமும் வைணவமும் சத்திவணக்கமும் அக்காலத்தே வழக்கிலிருந்தவை எனலாம். பஞ்சாக்ஷரம் அஷ்டாக்ஷரம் பாய் கலைப்பாவைமந்திரம் என்பவற்றை இளங்கோவடிகள் குறிப்பிடுவதால் இஃது அறியப்படும். நித்திய நைமித்திக வழிபாடுகளை, உரிமைபெற்ற ஆகமபூசகர்கள் நிகழ்த்திவந்தனர். திருமால் கோயில் அருச்சகன், சேடக்குடும்பி எனப்படுவன். பகவதியாகிய கொற்றவையைப் பூசிப்பவள் சாலினி எனப்பட்டாள். கண்ணகி கோட்டத்தில் நித்தியபூசைபுரிதற்குத் தேவந்தி என்ற பார்ப்பன மாது நியமிக்கப்பட்டிருந்தனள். இதனால், பெண்தேவதைகளைப் பூசிப்பதற்குப் பெண்பாலாரையே நியமிப்பது பண்டைவழக்கமென்பது தெரியலாம். இதுவே வடநாட்டுமரபுமாயுள்ளது. இப்பெண்பூசகர் 'பயிரவி' எனப்படுவர். இவ்வாறு வைதிகதெய்வங்களோடு ஆசீவக சைன பௌத்தப் பள்ளிகளும் அச் சமயசங்கங்களும் நகரப்புறஞ்சேரிகளிலே அமைந்திருந்தன. அப்பள்ளிகளையும் சங்கத்தாரையும் தமிழ்மக்கள் ஆதரித்துப் போற்றிவந்தார்கள். சுருங்கக்கூறுவோமாயின், வேதாகமவழக்கொடு அமைந்த கொள்கைகளே தமிழ்நாட்டார் கடைப்பிடித்தொழுகிய பழங்கொள்கைகள் என்றும், கடவுளும் இருபிறப்பும் மறுபிறவியும் இல்லை என்ற நாஸ்திகமதம், அக்காலத்தில் தமிழகத்தே தலைகாட்டவும் பெற்றதில்லையென்றும் உள்ள நூல்களைக்கொண்டு நாம் உறுதிகூறலாம்.

அடுத்து, தமிழ்மக்களின் தேசாபிமானத்தைப் புகழத்தகும். தேசாபிமானம் என்பது ராஜாபிமானத்தை உள்ளடக்கியதாம். தமிழ்மக்கள் தம் அரசனைத் தெய்வத்தோடு ஒப்பவைத்து அவனாட்டின்பெருமையைக் காத்துவந்தனர். 'வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பு' என்று தொல்காப்பியனார் இட்ட ஆணைப்படியே, அசோகச்சக்கரவர்த்திகாலத்துக்கு முன்னும் அதன்பின்னும், இத்தமிழகத்தைத் தனிச்சுதந்தரம்பெற்ற நாடாக வைத்த ஏற்றம் இதன் மக்களுடையதேயாகும். இவையெல்லாம் தங்கள் பெருவிழாக்களிலும் ஆடல்பாடல்களிலும் தம் அரசனது வெற்றி வேண்டி இவர்கள் பாடிவந்த வாழ்த்துக்களால் விளங்குகின்றன.

மூன்றுவதாக, இம்மக்கள் தத்தம் குலதர்மங்களிற் குன்று திருந்த சிறப்பைக் குறிப்பிடத்தகும். குறிஞ்சிநிலத்துக் குன்றக் குறவர்கள் வாழும் ஊர் சிறுகுடி எனப்பட்டது. இவர்களிலே, ஆண்பாலார் தினைவிளைத்தும் தேன் எடுத்தும் வேட்டையாடியும் வாழ்வர். பெண்பாலார், தினைப்புனங்காத்தும் அருவியாடியும் சுனைகுடைந்தும் அகமகிழ்வர்; அரசராலும் காதலிக்கப்பட்ட கட்டழகுவாய்ந்தவர் இன்னோர். ஒருசமயம் செவ்வேள்குன்றின் ஒரு பக்கமாக இம்மகளிர் தினைப்புனங்காத்துத் திரும்புங்காலையிற்றான், கணவனையிழந்துபோந்த கண்ணகி ஆங்கு வந்து நின்றாள். அப்போது இப்பத்தினி, தங்கள் கட்புலங்காண விட்புலஞ்சென்றது கண்டு வியந்து, அவளை முதன்முதல் தெய்வமாகக்கொண்டு வழிபட்டும் குரவையாடியும் போற்றியவர்கள் இம்மலைப்பெண்டிரே. இவரது குரவைப்பாடல்களிலிருந்து, குறிஞ்சிமக்களின் மணமுறை களவுக்கூட்டம் என்பதும் அதனை ஊரவர் நன்கறிந்தபின் பலரறி மணம்புரிந்து வாழ்வர் என்பதும் தெரியவருகின்றன. இவர் வழிபடுதெய்வம் முருகக்கடவுள். இக்கடவுள்பொருட்டு, வேலன் என்ற பூசகனால் வெறியாட்டென்ற சாந்திக்கூத்தும் நடத்தப்படும்.

தங்கள் அரசன் மலைநாட்டுக்கு விஜயம்செய்யும்போது, அரிய மலைப்பண்டங்களைத் திரட்டிக்கொண்டு கூட்டமாக அவனைக் கண்டு காணிக்கையிடுவது இவர்கள் வழக்கம். ஒருசமயம் இவ்வாறுவந்த தம்மரசன் செங்குட்டுவனுக்கு இன்னோர் சமர்ப்பித்த மலைபடு திரவியங்கள், ஒருநூற்றுண்டுக்குமுன் அம்மலைவாசிகள் குறிப்பிட்டுள்ள பண்டங்களுடன் பெரும்பாலும் ஒத்திருத்தலை, ஆனைமலைக் கைபீதால் தெரியலாம்.

இனி, ஆயராகிய முல்லைநிலமக்கள் பசுச்செல்வம் பெருகப் படைத்தவர்கள். திருமாலவதாரமான கண்ணபிரானைத் தம் வழிபடுதெய்வமாகக் கொண்டவர்கள். உத்தமகுணங்களும் உபகாரசிந்தையும் உடையோர். விசேடகாலங்களில் இவர்களும் ஒருவகைக் குரவைக்கூத்து நிகழ்த்திவந்தனர். இக்குரவை, கோகுலத்தில் கண்ணபிரான் நிகழ்த்திய ராஸக்கிரீடை போன்றதாம். இது நிகழும் இடம், ஆனிரைகளின் எருக்களை வேலியாகக்கொண்ட

தாதெருமன்றம் ஆகும். தம் ஆயர்பாடியில் நிகழ்ந்த துன்னிமித் தங்களைக் கண்டு, அதற்குச் சாந்தியாக இவ் வாய்ச்சியர்குரவை, கண்ணகி காணும்படி இவர்களால் நடைபெற்றது. இக்குரவைப் பாடல்களிலிருந்து, இவர்கள் மணவொழுக்கம் நன்கு அறியப்படும். அஃதாவது: அடங்காத வலிய எருதுகளை வெளியில் வாலுருவி விட்டு, அவற்றைத் தழுவிப்பிடிப்பவனுக்கே இன்ன மகள் உரியள் என்று அறுதியிட்டு அவ்வாறு பிடித்தவற்கு அவளை அளிப்ப தாகும். இம்முறை, ஆய்க்குலத்தவதரித்த நப்பின்னைபொருட்டுக் கண்ணபிரானே கையாண்டதொன்றாம். எழுவர் கைகோத்து நின்று ஆடிய இக்குரவைக்கூத்து, கண்ணன் நப்பின்னையை மணந்த வாலசரிதைநாடகங்களுள் ஒன்றென்பர் இளங்கோவடிகள்.

இனிப் பாலைநிலமக்கள் வேட்டுவர் எனப்படுவர். அஞ்சா நெஞ்சும் தறுகண்மையும் படைத்த வீரர் இன்னோர். வழிப்பறி கொள்ளை பசுநிரைகவர்தல் முதலிய கொடுந்தொழில்களால் வாழ் பவர். இவர்கள் வழிபடுந்தெய்வம் பகவதி என்ற துர்க்காதேவி. அத்தேவியை இன்னோர் வணங்குமுறையும் செய்துகொள்ளும் பிரார்த்தனையும் மிக விநோதமானவை. வெளியேறிச்சென்று கொள்ளைப்பொருள்களைக் காலங்களில் வேட்டுவர் கொண்டுவாரா மையால், தம்மூர்கள் வளங்குன்றியும் மக்கள்வாழ்க்கை கெட்டும் போயினவாம். வேற்றிடங்களிலிருந்து ஆனிரைகளை அவர்கள் கவர்ந்துவாராமையால் தம்மூர்மன்றுகளெல்லாம் பாழாயினவாம். இவற்றிற்கெல்லாம், இம்மறக்குடிகள், அறக்குடிகள்போல அவிந் தடங்கியதே காரணமாம். ஆகவே, இதற்குச் சாந்தியாக, தேவிக் குத் திருவிழாவொன்று எடுக்கலானார்கள். குறிப்பிட்ட வேட்டுவச் சிறுமியொருத்தி, துர்க்காதேவிபோல அலங்கரிக்கப்பெற்றுக் கலை மானொன்றின்மேல் ஏற்றப்பட்டாள். கொட்டுமுழக்கங்களுடனும் பலிப்பண்டங்களுடனும் கூட்டமாக வேட்டுவமகளிர் பின்வரக் கொற்றவைகோயிற்கு வந்து, சந்நிதிமுன் அவளை நிறுத்தித் தேவி யைத் துதிக்கலானார்கள். அப்போது அச்சிறுமிமேல் தெய்வ

ஆவேசம் வந்தது. அவ்வாவேசத்தில் ஏதோ சிலவற்றைக்கூறிக் கொண்டே, அவ்விழாப் புதுமையைப் பார்த்துக்கொண்டிருந்த கண்ணகியின் அருகேவந்து, அவளது பின்னிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டாள் அச்சிறுமி. பின்பு, அரசனுக்கு வெற்றிவேண்டி வேடமகளிரெல்லாம் வாழ்த்தினர். இதனோடு இவ் வேட்டுவவரி முடிகின்றது. இவ்வாறு, தெரிந்தெடுத்த சிறுவர் சிறுமிகளுக்குத் தெய்வாலங்காரங்கள்புரிந்து வழிபடும் முறையை, ராமலீலா போன்ற பெரிய திருவிழாக்களில் வடநாடெங்கும் காணலாம்.

இனி, மருதநிலத்தவரின் வழக்கங்கள் சிலப்பதிகார நாடுகாண்காதை முதலியவற்றால் அறியப்படும். இதன்மக்கள், உழவர் உழத்தியர் எனப்படுவர். இவர்கள் இயல்புகளும் செய்தொழில்களும் கூத்தும் இராஜாபிமானமும் இளங்கோவடிகளாற் சிறப்பிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறே கானல்வரி என்ற காதையால், நெய்தனிலத்து மக்களான பரவர், திமில் என்ற கட்டுமரமேறிச்சென்று கடலில் மீன்பிடித்துவாழும் இயல்புகளும், களவுமுறையான இவரது மணச் செய்தியும், அறியப்படும்.

இவ்விருவரும் முறையே இந்திரனையும் வருணனையும் வழிபடுபவர்.

இனி நகரத்துவாழுந் தலைமக்களிலே முதல்வருணத்தவரான அந்தணர், ஓதல் வேள்விபுரிதல் முதலிய அறுதொழிலுடையராய்ப் பிறரெல்லாம் வழிபட வாழ்ந்தனர். ஆசான் பெருங்கணி அமைச்சர்களாகவும் இன்னோர் அக்காலத்து விளங்கினர். இவருள் ஒருசாராரைப் பஞ்சக்கிராமிகள் என்பர் உரைகாரர்கள். இதனால் பழைய பார்ப்பனக்குடிகளில் இவர் ஒருபகுதியார் என்று தெரியலாம். இலங்கைப்பகுதியை ஆண்ட புவனேகபாகு என்ற வேந்தன் பஞ்சக்கிராமவேதியரைத் தன்னாட்டிற் குடியேற்றினன்என்று தக்ஷிண கைலாசபுராணப் பாயிரம் கூறும். பூதக்கிராமம், இந்திரியக்கிராமம் என்று வடநூல்களில் வழங்கும் பார்ப்பனக்குடிப்பெயர்களோடு, இப் பஞ்சக்கிராமத்தொடர்வழக்கும் ஒப்பிடத்தக்கது.

பூதங்களும் இந்திரியங்களும் ஐந்தாதலை நோக்குக. இப்பார்ப்பனக் குடியினரில் மாடலன், காப்பியன், கோசிகன், பராசரன் முதலிய கோத்திரத்தவர்கள் உண்டு. இவரன்றித் தம் குலவொழுக்கங் களிற் குன்றிய பார்ப்பாரும் அங்கங்கே இருந்தனர். கூத்து வரிப் பாடல் முதலியவை புரிந்து வாழ்வது இவர்கள் தொழில். இவர் போன்றவரை "வேளாப்பார்ப்பான்" என்று அகநானூறு கூறும்.

அரசராகிய இரண்டாம்வருணத்தவரின் இயல்புகளாக இளங்கோவடிகள் கூறியவை அளவற்றன. அவற்றைத் தனிக் கட்டுரையாகவேவைத்து விளக்கத்தகும். சிலப்பதிகார சரிதையி லிருந்து, செங்கோல்வளைய உயிர்வாழாதவர் தமிழரசர் என்பது தெரியலாம். இஃதொன்றே இவர்பெருமைவிளக்கப் போதியது.

மூன்றும்வருணத்தவராய் மன்னர்பின்னோர் எனப்படும் வணிகமக்களின் வழக்கவொழுக்கங்களும் பலவாம். இன்னோர், இப்பர், கவிப்பர், பெருங்குடிவாணிகர் என்ற மூவகைப்பிரிவுடையரா யிருந்தனர். கடலோடியும் தரைவழிச்சென்றும் பெரும்பொரு ளீட்டிய வகையில், முறையே, இவர்களை மாநாய்கர் மாசாத்துவர் என இருபிரிவினராகவும் கூறுவர். கண்ணகியின் தந்தை மாநாய் கன்: கோவலன் தந்தை மாசாத்துவன். மிக்க செல்வம்படைத்த வணிகர்க்கு அரசன் எட்டி என்ற பட்டமும் அதற்குரிய பொற் பூவும் அளித்துக் கவுரவித்துவந்தான்.

இவ்வணிகரது மணமுறை வேதத்துக்கண்ட பிராசாபத்யம் என்பர் பழைய உரைகாரர்கள். அஃதாவது, கன்னியைக் கொள் ளற்குரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசப்பொருளினும் இரட் டிப்பு அளவாக, அக்கன்னியைப் பெற்றோர் மணமகனுக்கு அளித்து மகட்கொடுப்பதாகும். கோவலன் கண்ணகிகளின் திரு மணங்கூறுமிடத்தில்—

'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்து'

அவர்கள் திருமணம்பெற்றார் என்பர் இளங்கோவடிகள். 'மறை வழிகாட்டிடத் தீவலஞ்செய்தனர்' எனவே பாணிக்கிரகணம்,

லாஜ (பொரி) ஓமம், அம்மிமிதித்தல் முதலிய சடங்குகளும் அடங்கும். அம்மிமிதித்தல், அக்கினிப்பிரதக்ஷிணமென்ற தீவலத்தில் உடனிகழ்வதேயன்றிப் பிறிதன்று. சீவகன், இலக்கணையாரின் 'இடக்கைபற்றி வளரெரி வலங்கொண்டான்' என்று சிந்தாமணியாசிரியர் கூறியவிடத்து—'பாணிக்கிரகணம்பண்ணி அக்கினியை வலங்கொண்டான் எனவே, பொரியாலுள்ள ஓமமும் அம்மியிற் கால் வைத்தலும் பெற்றாம்' என்று நச்சினார்க்கினியரும் எழுதினர். இச்சடங்குகள் மூன்றுவருணத்தார்க்கும் உரியவாம்.

இவ்வாறு, வணிகர்மணமுறை வேதவழக்குடன் அமைந்ததாயினும், கோவலன் கண்ணகிக ளிருவரும் இடையில் ஒருவரையொருவர் கண்ணுற்றுக் காதல்கூர்ந்திருந்தவர் என்று கொள்வது உலகியல்புக்கு ஒத்ததேயாம். சடங்கின்வழி மணப்பதன்முன், வதூவரர்க்குள் இவ்வாறு உள்ளப்புணர்ச்சிநிகழ்தலை ஆபஸ்தம்பர் முதலிய தருமநூலாரும் கூறியுள்ளார் என்பர். இதுபற்றியே, 'இருவர் கண்ணுற்றுக் காதல்கூர்ந்தவழியெல்லாம் கந்தருவமாம்' என்றார் நச்சினார்க்கினியரும்.

கோவலன் கண்ணகிகள், அகத்தமிழ்முறைப்படி களவில் மெய்யுறக்கலந்தபின்னரே, இத்திருமணம்பெற்றார் என்பதற்குச் சிறந்த குறிப்பொன்றும் நூலில் இல்லை. அவ்வகைச்சேர்க்கை உண்டாயின், மணச்சடங்கையடுத்துக் கண்ணகியுடன் கலந்து மகிழ்ந்த கோவலன், அவளைப் பலபடியாக நலம்பாராட்டியவிடத்தும் பிறவிடங்களிலும் அக்குறிப்புப் புலப்பட அவன் கூறாமற் போகான். 86, 136-ம் அகப்பாடல்களில், களவிற்கூடிய தலைமகன் பின்பு மணந்துகலந்தபோது, அக்குறிப்புப் புலப்படக் கூறியிருத்தலும் காணலாம். ஆகவே, மாதரார் தொழுதேத்தும்படியாகவும் ஆயத்தார் பாராட்டும்படியாகவும் கண்ணகிகோவலர்கள் காதலிக்கப்பெற்றவர்கள் என்ற கருத்துற எழுதிய உரைகாரர்கள் கருத்தே நேர்மையானது. மாதர் தொழுதேத்தலும், ஆயம் பாராட்டுதலும் களவுக்காலநிகழ்ச்சியாகாமையும் அறியத்தகும்.

இனி நான்காம்வருணத்தவர் உழுவித்துண்ணும் வேளாண் மாந்தராவர். பொதுவாகக் கூறுவோமாயின், தேசச்செல்வத்துக்கு மூலமான குடிகளில், இவரே தலைசிறந்தவர்கள் எனலாம். இவர்களது பணிவடக்கங்களும் உபகாரச்செயல்களும் உலகறிந்தவை.

மேற்கூறிய குடிமக்களிலே அரசர்களால் மதிக்கப்பெற்ற குறுநிலமன்னர்களும் ஓவியர் சிற்பர் முதலிய தொழிலாளிகளும் அடங்குவர். அதனால், இவர் வழக்கங்கள் அக்குடிமக்களொழுக்கங்களின் வேறுபட்டனவல்ல என்றும், சங்கராசாதிமக்களும் இத்தகையவரேயென்றும் அறியலாம்.

இனிப் பொதுவான வழக்கவொழுக்கங்கள் சிலவற்றைக்கூறி, இக்கட்டுரையை முடிக்கின்றேன். மகளிரெல்லாம் மாலைக்காலத்தில் மணிவிளக்கேந்தி நெல்லும் மலரும் கலந்துதூவித் தம் இல்லுறை தெய்வத்தை வழிபடுவர். இரவிற்கென்று அவர்கள் ஒருவகைக் கோலங்கொள்வ துண்டு. சுமங்கலிகளான பெண்டிர், மங்கலக் குறியாக நெற்றிக்குத் திலகமிட்டுக்கொள்வது மரபு. ஆனால் ஆடவர்கள் நெற்றிக்கிட்டுக்கொண்டு மங்கலகாரியமோ வழிபாடோ செய்தவர் என்பதற்குச் சங்கநூல்களில் யாதொருகுறிப்புங் காணப்படாமை வியப்பாகவே உள்ளது. மேன்மக்கள் தாம்பூலந் தரிப்பதுண்டென்பது அடிகள்வாக்கால் அறியலாம். ஆனால், உபசார காலத்திலோ உண்டபின்போ பிற்காலம்போலத் தாம்பூலம் வழங்குவதும் தின்பதும் ஐந்திணைமக்களிடையே காணப்படாமையும் அதிசயந்தருகிறது. சந்தனமணிவதும் பூச்சூடுவதும் தமிழ்நாட்டார் சிறப்பாகக்கொண்டவை எனலாம். மகப்பேறும் மரணமுமாகிய காலங்களில் 'வாலாமை' என்ற தீட்டுக்காப்பது உண்டு. வணிகர்குலத்துக்கு 14-நாள் இத்தீட்டு உண்டு என்று ஸ்மிருதிகள் கூறும். கண்ணகி ஈரேழ்நாளகத்தெல்லை நீங்கியபின் கணவனுடன் விண்ணுலகஞ்சென்றாள் என்றுள்ள வரலாற்றை நோக்குமிடத்து, இத்தீட்டுக் கழிவின்பின், தன் கணவனைக்கூடும் மங்கல நாளுக்காக அவள் காத்திருந்தவள்போலும் என்று கருத இடந்

தருகின்றது. கணவனை இழந்த மகளிர், முதலில் தம் கைவளைகளை உடைத்தெறிதலும் மரபு.

நகரத்து மேன்மக்கள் கோவேறுகழுதை கொல்லாப்பண்டி கூடாரவண்டிகளில் ஏறிச் செல்வர். அலங்காரமான யானைமுகவோடம், குதிரைமுகவோடங்கள் ஆறுகளைக் கடக்க உபயோகப்பட்டன. யவனர் என்ற புறநாட்டார் அரசரின் வாயில்காவலராக நியமிக்கப்பட்டிருந்தனர். அவ் யவனர்முதலியோரது வகை வகையான வியாபாரக்கப்பல்கள் துறையறிந்து கரைசேரக் கடற்கரையில் கலங்கரைவிளக்கம் அமைக்கப்பட்டிருந்தது. தீநா முதலிய விளக்குகளும் ஆவணவீதிகளில் மிளிர்ந்தன. சாஸனமும் இத்தீநாவைக் குறிப்பிடுகின்றது. விற்பனைப்பண்டங்கள் கொடிகளால் விலையுடன் குறிக்கப்பட்டுவந்தன. அக்கரைச்சீமையினின்று அரிய பண்டங்கள் கடற்கரைகளிற் குவிக்கப்பட்டு விலைச்சென்றன. இரத்தினங்களிலும் உலோகங்களிலும் பல்வகைப் பருத்திநூல்களிலும் பிறவற்றிலும், தத்தம் அரிய தொழிற்றிறமைகளைக் காட்டிவந்த எண்ணிறந்த தொழிலாளர்கள் மலிந்திருந்தனர். முடிவாக, அரசியல் பிழையாமலும், பத்தினிவணக்கத்தைப் புரிந்தும், ஊழ்வினைவலியை உணர்ந்தும்—சிலப்பதிகாரத்தின் முடிந்த கருத்தின்படியே—தமிழ்மக்கள் யாவரும் ஒழுகித் தமிழகத்தை ஓங்கவைத்தனர்.

கம்பராமாயணசாரம்

உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

௩எசு-ஆம் பக்கத் தொடர்ச்சி

௧௨-வது சீதை வனம்புகுபடலம்

இராமனாணைப்படி இலக்குமணன் சீதையைத் தேரிலேற்றிக் கொண்டுபோய் வான்மீகிவாழ்ந்த வனத்தில் விட்டதைக் கூறுவது.

இராமனிடம் விடைபெற்றுப் புட்பகம் குபேரனிடம் போதல்

சுக்கிரீவன் விபீடணன் முதலியோர் விடைபெற்றுச்சென்ற பின், இராமன், ஒருநாள் ஓர் ஆகாயவாணியைக் கேட்கலானான். 'நான் புட்பகம்; எனக்குக் குபேரன் கட்டளையிட்டதைக் கேட்பாயாக. "தசரதராமனால் தசக்கிரீவன் (-பத்துக்கழுத்துடைய ராவணன்) எமனுக்கு இரையாகுதல் திண்ணம். நீ இராமன் விரும்பிய வண்ணம் நடந்து திரும்பிவருவாயாக" என்பதே அந்தக் கட்டளை. நான் அவனிடம் ஏக விடைதருவாயாக' என்று அசரீரிவாக்காகப் புட்பகவிமானம் கூறியது. இராமன் ஆச்சரியமடைந்து அதனைப் பூக்கொண்டு பூசித்துப் 'போகுக' என்று விடைகொடுக்க, அது புறப்பட்டுப்போயிற்று.

இராமனாட்சியால் ஏற்பட்ட அனுகூலங்கள்

புட்பகம் போய்விடக் கண்ட பரதன், இராமனைநோக்கி, 'உன் அரசாட்சியில், ஆயுதங்கள் முதலியவற்றால் இறப்பாரில்லை. ஆனைகளுக்குச் சிங்கங்களும் மான்களுக்கு வேங்கைகளும் சத்துருக்களாயில்லாமல் மித்துருக்களாயிருக்கின்றன. பிள்ளைகள் சாகக் காணும் பெற்றோரில்லை. கணவரிறக்கக்காணும் மனைவியரில்லை.

உலகத்தாரெல்லோரும் இராமனே என்றும் அரசாளவேண்டு மென்று விரும்புகின்றார்கள்' என்றான். அதுகேட்டு, இராமன் மகிழ்வுற்றான்.

இராமனும் சீதையும் இன்பவாழ்வு வாழ்தல்

இராமனும் சீதையும் இரவும் பகலும் இணைபிரியாமல் வாழுங் காலத்தில், பங்குனிமாதம் வர, வசந்தகாலம் ஆரம்பமானது. மரங்களில் முதிர்ந்த இலைகள் உதிர்ந்தொழிய இளந்தளிர்கள் தோன்றியது, பழைய ஆடையைக் களைந்து புதிய ஆடை புனைந்தது போன்றது. பொன்னிறப்பூப்பூத்த கோங்கமரங்கள் பொன்னாடை போர்த்தனபோன்றன. செம்பூக்கள்நிறைய மலர்ந்த முருக்கந்தருக் கள் சிவந்த ஆடை அணிந்தன ஒத்தன. (சரம்சரமாக மஞ்சள் வண்ணமலர்கள்) பூத்த கொன்றைகள் பொன்னரிமாலைகள் தூக்கப் பெற்றனபோன்றன. மைந்தர்கள் மாதர்பால் இன்பம்நுகர்தல் போல வண்டுகள் மலர்களில் தேனுண்டன.

இராமனும் சீதையும் சோலையை அடைதல்

விண்ணுலகத்துக் கற்பகவனம் மண்ணுலகத்து விழுந்தது போன்றதும் வெயில்நுழையாததும், இராமனுடைய செங்கண்க ளுக்கு அஞ்சிச் செந்தாமரைமலர்களும் சீதையின் கருங்கண்க ளுக்கஞ்சிக் கருங்குவளைமலர்களும் ஒளித்து உறைதல்போல மலர்ந்த தடாகத்தையுடையதும், தடாகக்கரையில் விளங்கும் பளிங்குமண்டபத்தையுடையதுமான ஒருசோலையை இராமனும் சீதையும் அடைந்தார்கள்.

இராமன் சீதைக்குச் சோலைவளங் காட்டுதல்

இராமன், சீதையைநோக்கி "உன்னுடைய மென்னடைக்குத் தன்னடை பின்னிடைவதையெண்ணி நாணி ஒளிப்பனபோல அன்னங்கள் மரங்கள் நெருங்கிய இடங்களை நாடிச்செல்வதைப் பார்ப்பாயாக. ஒருவன் செல்வமுள்ளவனாயிருக்கும்வரையும் அவ னிடமிருந்து செல்வம் அனுபவித்து அவன் வறியனானவுடனே

அவனை விட்டுநீங்கி வேறு செல்வமுள்ளவனைத் தேடியடையும் உறவினர்போல, ஒருமரம் பூத்திருக்கும்போது அதனை விட்டகலா திருந்து தேனுண்டு, பூமாறினவுடன் நீங்கிப் பூத்திருக்கும் மரத்தி னிடம் போகின்ற வண்டுகளைக் காண்பாயாக. தவசியர்போல வேடம்பூண்டு தீவினைசெய்வார்போல, மீன்களைத் தப்பவிடாமல் விழுங்குதற்கு, இதுவே உபாயமென்று கண்மூடி அசையாதிருக் குங் கொக்குகளைப் பார்ப்பாயாக. கரிமூடிய உலைத்தீப்போல வண்டு கள்மொய்த்த செந்தாமரைமலரை நோக்குவாயாக'' என்று சோலை வளங்களைக் காட்டினான்.

இராமனும் சீதையும் பளிங்குமண்டபத்தில் அமர்தல்

பின்பு, இராமன் மேற்கூறிய வெள்ளிய பளிங்குமண்டபத்தை அடைந்து மங்கையர் வாழ்த்த மாகதர் (-புகழ்வோர்) ஏத்தச் சீதையோடு வீற்றிருந்தான். அந்தக் காட்சி, அவதார காலத்துக்குமுன்னே, அவன் வெண்மையான பாற்கடலிலே பொன்னிறத் திருமகளோடு வீற்றிருந்த தோற்றம்போன்றது. மேகம் மின்னலோடு விளங்கினாற்போல இராமன் சீதையுட னிருந்து ஆடுவார் ஆடலைக் கண்டு பாடுவார் பாடலைக் கேட்டுப் பரிசுவழங்குதலும் பூக்கொய்தலும் நீராடலும் வனபோசனமும் செய்து அந்தச்சோலையிலே இனிதாகப் பொழுதுபோக்கிக்கொண் டிருந்தகாலத்திற் சீதை கருப்பவதியானாள்.

இராமன், கருப்பமுற்ற சீதையின்விருப்பம் யாதென வினவ அவள் தெரிவித்தல்

அப்போது, இராமன், (கருப்பமுற்றமாதர் விருப்பமுற்றதைச் செய்தல் கடனென்று கருதி) 'உன் மனத்துள் விரும்பியிருப்பதை விளம்புவாயாக' என, அவள் உள்ளத்துள்ளதை உரைக்கக் கூசியவ ளாய்ச் சிரிக்க, அவன் 'சொல்லு சொல்லு' என்று பலமுறை சொல்லியபின், அவள் 'முனிவராச்சிரமத்துக்குச் சென்று அங்கே

அவர்களுக்குப் பணிவிடைபுரிந்து ஒருநாள் தங்குதல் என் விருப்பம்' என்றாள். அவன் 'நாளையே முனிவர்வாழுமிடத்தைக் காட்டுவேன்' என்று கூறி, அவளை அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டுச் சென்று கதைகூறுவார் கதைகூறக் கேட்டுக் கொண்டாடியிருந்தான்.

இராமன், உலகவதந்தி யாதென உசாவுதல்

அப்போது, அவன், 'இந்தக் கதைகள் கிடக்க; அரசன் கேட்கவேண்டியது, தன்னைப்பற்றித் தன்நாட்டிலும் நகரிலும் உள்ள சனங்கள் தங்களுள்ளே சொல்லிக்கொள்வது யாது? என்பதே. அதைச் சொல்லுங்கள்' என, அவர்கள், 'மலைகளைக்கொண்டு கடலையடைத்து இலங்கைக்குச்சென்று இராக்கதர்குலமுழுவதையும் எமனுக்கிரையாக்கி, இந்திரன் தலையெடுக்கும்படி இந்திரசித்தையும் இராவணனையும் வென்ற இராமனுக்கு எதிரில்லையென்று சொல்லுகிறார்கள்' என, அவன் 'நல்ல செய்திகளைப்போலத் தீயசெய்திகளையும் தெரிதல்வேண்டும். அவைகளையும் கூசாது கூறுங்கள்' என்றான்.

இராவணன்வசமான மனைவியுடன் இராமன் மானமின்றி வாழ்கின்றானென வதந்தியுளதெனல்.

அவர்கள், 'இராவணன் கவர்ந்துகொண்டுபோய் இலங்கையில் ஒருவருடகாலம் சிறையில்வைத்திருந்த சீதையைத் திரும்பவும் மனைவியாகவைத்துக்கொண்டு இராமன் மானமின்றி வாழ்கின்றானென்று உலகத்தார் பேசிக்கொள்கிறார்கள்' என்றனர்.

இராமன் சீதையை முனிவராச்சிரமத்தில்விட முடிவுசெய்தல்

இராமன், அவர்கள் கூறிய பழிவதந்தி கேட்டு மார்புள்ளே வேல்பாய்ந்தாற்போல வருந்தி, மானபங்கவுணர்ச்சி மிக்கவனாய்த் தம்பியரைத்தருவித்துத் தனியிடத்திலிருந்து 'என் நண்பரும் சகோதரருமான நீங்களே என்வலியும் தவமும் இராசபோக இன்பமும் உயிருமாயிருக்கின்றீர்கள், அப்படியே, என் இகழும்

புகழும் உங்களுடையவைகளாயுள்ளன. இராவணன்சிறையி லிருந்த சீதை தீயுள்முழுகி மாமுனிவருக்கும் வானவருக்கும் என் மனத்துக்கும் தூயவளாயிருந்தாளாயினும், அவளை உலகோர் பழிப்பதைக்கேட்டு என் உள்ளம் உளைகின்றது. உலகோரொப்பாத உண்மையால் ஏற்படும் பயன் யாதுமில்லை*. உலகோர் இல்லதை உள்ளதென்றால் உள்ளதாம்; உள்ளதை இல்லதென்றால் இல்லதாம்†.

ஆதலால், சீதையை முனிவர்களுடைய ஆச்சிரமத்துக்குக் கொண்டுபோய்விடவேண்டுமென்று முடிவுசெய்திருக்கிறேன்' என்றான்.

'சீதையை வான்மீகிவனத்தில் விடுவாயாக' என்று இராமன் இலக்குமணனுக்குக் கட்டளையிடல்

இராமன் கூறியதை இடிவிழுந்தாற்போலக் கேட்ட தம்பியர், அவனைக் கைகேசி வனத்துக்குப் போகச்சொல்லிய அன்றையினும் அதிகமான துயரமுடையாராய் வேறு செய்யத்தக்கதின்னதென்று தெரியாராய் வருந்தினார்கள்.

இராமன், இலக்குமணனைநோக்கிச் சீதைக்கு முனிவர்வாழும் வனத்தைக் காட்டுவதாகச் சொல்லியிருக்கிறேன். நீ அவளைத் தேரிலேற்றிச்சென்று நம் தந்தையின் நண்பனான வான்மீகியின் ஆச்சிரமத்தில் விட்டுவருக' என்றான். இலக்குமணன், சீதையின் மாளிகைக்குச் சுமந்திரன் செலுத்திய தேர்மீதுசென்று, 'முனிவரை வணங்கும்படி சீதாதேவியை வனத்துக்கழைத்துச்செல்லும்படி

* "உண்மையாற் பயன்என்? உலகுளோர்க் கொத்திடா தொழியின்" (இப்படலம் ௩௭).

† ஓதநீர் வேலை உலகுளோர் இல்ல துளதெனின் உள்ளதாம் உள்ள தியாதொரு பொருளை இல்லையென் றுரைக்கின் இல்லையாம் இது உலகியற்கை (இப்படலம் ௩௮).

ஓதம் நீர் வேலை உலகு- அலை(களையுடைய) நீர் (உள்ள) கடல் (சூழ்ந்த) பூமி.

இராமன் கட்டளையிட்டிருக்கிறான்' என்று தாதியர்வாயிலாகச் சீதைக்குத் தெரிவிக்க, அவள் விலையுயர்ந்த பல ஆடையாபரணங்களை யெடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு புறப்பட்டுத் தேரிலேறினாள்.

வனத்துக்குச் செல்லுதல்

அப்போது சீதைக்குத் துன்னிமித்தமாக வலக்கண் துடித்தது. அவள், "இந்நிமித்தத்தால் யாதுநேருமென்று தெரியவில்லை. விலக்குதற்கரிய விதியினால்விளையும்விளைவுகளை முன்னறியவல்லாரில்லை" என்றுகூறி(த் தனக்கு நேரக்கூடிய தீங்கைக் கருதாளாய்த் தனக்கு உரியராயுள்ளார்க்கு ஏதேனும் தீங்குநேர்ந்துவிடலாகாதேயென்ற சிந்தையினளாய்) 'என் சுவாமிக்கும் என் கொழுந்தன்மாருக்கும் மாமிமாருக்கும் சுற்றமானவர்க்கும் மற்ற யாவருக்கும் தீமையில்லாமல் நன்மையுண்டாம்படி செய்குவாயாக, தெய்வமே!' என்று கைகூப்பிப் பிரார்த்தனைசெய்தாள். தேர், தென்திசைநோக்கிச்சென்று அந்திநேரமானபோது கோமதி யாற்றங்கரையை அடைந்தது. அங்கே சீதாலக்குமண சுமந்திரர் மூவரும் இராத்திரி தங்கியிருந்து மறுநாள் மத்தியானம் கங்கா நதியை அடைந்தார்கள்.

இலக்குமணன் துக்கம்

அப்போது, இலக்குமணன் (சீதையைக் காட்டில்விட்டுச் செல்லவேண்டியிருக்கிறதேயென்ற துக்கம் நெஞ்சுள்ளே பொங்கி மேலெழ அந்தத்) துக்கம் வெளிப்படாமல் அடக்கிப் பொருமிக் கண்ணீர்துளிக்க வருந்தியிருப்பதைக் கண்ட சீதை, 'நீ எதற்காகத் துன்புறுகின்றாய். சொல்வாயாக' என, அவன் மறுமொழிகூறாமல் வாய்விட்டுக் கதறுவானானான். அவள், 'கங்கையைக்கண்டவர்கள் மகிழ்ந்து நீராடுவார்கள். (நீ அதைக்கண்டு துன்புறுகின்றாய். இது என்ன விபரீதம்.) உனக்குத் துன்பஞ்செய்பவர் (செய்யவல்லவர்) எவருமில்லை' என, அவன் (உண்மையை உடனே கூறமாட்டாதவனாய்) 'என் தலைவனை யென்றும் பிரிந்தறியாத யான், இரண்டுநாள்கள் பிரிந்ததனால் வருந்துகிறேன்' என்று போக்குவிடையளித்தான்,

சீதை இலக்குமணனுக்கு ஆறுதல் கூறுதல்

அவள், 'நன்றிக்குவித்தாய் நல்லொழுக்கத்துக்கு இருப்பிடமாயுள்ள முனிவரை வணங்கிப் பணிவிடைபுரிந்து அவர்களுடைய ஆசிபெற்றுத் தீவினையகற்றவும் அவர்கள் ஆச்சிரமத்திலுள்ள என்னுடைய பழைய தோழிமார்க்கும் அவர்களுடைய தாய்மார்க்கும் நான் கொண்டுவந்திருக்கிற ஆடையாபரணங்களை அளிக்கவும் இன்று ஒருநாளிருந்துவிட்டு மறுநாள் திரும்பிவிடுவோம். துன்புறுதிருப்பாயாக' என்று ஆறுதல் கூறினாள்.

அவன் துக்கத்தை உள்ளடக்கிக்கொண்டு அவளைத் தோணியிலேற்றிச்செலுத்திக் கங்கையின் தென்கரையிற் சேர்த்தபோது, அவளை வலம்வந்து அடிபணிந்து 'யான் கூறுவதைக் கேட்பாயாக' என, அவள் 'கூறுக' என்றாள்.

இலக்குமணன் உற்றதுரைத்தல்

அவன், கடிய கொடிய துக்கம் பொங்கக் கண்ணீர்வெள்ளம் பெருக நடுக்கமுற்று வாய்நீர் வறண்டு நாக்குத் தழுதழுக்க (வெளியே வரமாட்டாத) வார்த்தைகளை வலிந்து பிடுங்கியெறிவான்போலப் பேசுவானானான்.

'உலகமாதாவே! உற்றதுரைக்கின்றேன். கேட்பாயாக. இராமன் மானவேல் மார்புள்ளே பாய வருந்தி வாடியமுகத்தனாகித் தம்பிமாரையழைத்துவரச்செய்து, "இராமன் இராவணன்சிறையிலிருந்தவளைத் திருப்பி ஆசையோடு மனையாளாகக்கொண்டு மானமின்றி வாழ்கின்றான். இப்படி வாழ்தலினும் சாதல் நல்லது" என்று உலகத்தார் உரைக்கின்றார்கள். உலகத்தாருள்ளதென்பதை யில்லையெனல்பேய்த்தனம். (ஆதலால் அவர்கள் அநியாயமாக அசுத்தை யென்ற) அவளை அசுத்தையென்று நான் துறந்துவிட்டேன்' என்று கூறினான். நாங்கள் எதிராக யாதுங் கூறுதற்கியலாமல் அச்சத்தோடு நின்றேம். அப்போது அவன் என்னைநோக்கி 'நீ சுமந்திரனைக்கொண்டு தேரை ஆயத்தம் (-தயார்) செய்யச்செய்து அவளைத் தேரிலேற்றி நம் தந்தையின் நண்பனான வான்மீகிமுனிவனது ஆச்சிரமத்தில் விடுவாயாக' என்று கட்டளையிட்டான். அவனாணையை மறுக்க அஞ்சி உன்னை இங்கே கொண்டுவந்துவிட்டேன்' என்று கூறினான்.

சீதை மயங்கிவிழுதல்

இலக்குமணன் கூறியது, காய்ச்சிய நாராசம் (-இரும்புச்சலாகை) போலக் காதுக்குள்ளே செல்லச் சீதை மயங்கித் தரையில் விழுந்தாள். விழுந்தவள் கண்ணீரருவி பெருகத் துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் புரண்டாள். எழுந்தாள். இருக்கமாட்டாமல் திரும்ப விழுந்தாள். வயிற்றில் அறைந்துகொண்டாள். அவள் சோகமிகுதியால் சோர்ந்து அயர்ந்தநிலைமையைக் கண்ட தேவர்கள் 'சீதை செத்தாள்' என்று தியங்கினர்கள். அவள் வேதனையைக் கண்ட இலக்குமணன் அலறிவிழுந்தான். அவள், (போய்விட்டதென்னும்படியான) உயிர் அரிதாகத் திரும்பவரப்பெற்றுக் கண்விழித்துப் புலம்பலுற்றாள்.

சீதை புலம்பல்

3 அன்னேயோ ஐயாவோ வாருயிர்த் தோழிமீர்காள்
தன்னேரி லாதவென்றித் தாசாதி யார்செய்த
இன்னாத விச்செயலைக் கேட்டபோ தென்படுதீர்
என்னேயிவ் வுலகத்தில் யானேவிங் கிவைபடுவேன் ?

கொண்டுகூட்டு: 'ஓ! அன்னே!, ஓ! ஐயா!; ஆருயிர்த்தோழிமீர்காள்!, தன்நேர் இ(ல்)லாதவென்றித் தாசரதியார்செய்த இன்னாத இச்செயலைக் கேட்டபோது என்படுதீர்! இவ்வுலகத்தில் யானே இவை படுவேன்? என்னே!

பொருள்: ஓ! தாயே! ஓ! தந்தையே! அருமையான உயிர்த் தோழிமார்களே! இராமன்செய்த (என்னைத் தனியாகக் காட்டில் விட்ட) துன்பமான இந்தச்செய்தியைக் கேட்டபோது என்னபாடு படுவீர்களோ! இந்த உலகத்தில் (துன்பம் அணுகமுடியாத இன்ப நிலையிலிருந்த) நானே (என்னையறிந்தார் யாருமில்லாத) இந்த அரணியத்திலே (அனாதையாய் நிர்க்கதியாய் இதற்கு மேலான துன்பமில்லையென்னும்படியுள்ள) இந்தத்துன்பத்தை அனுபவிப்பவளானேன். இது (மிக்க வேதனை விளக்கும்) ஆச்சரியம்.

அன்னே - அன்னையே - தாயே! ஆருயிர் - அருமையான உயிர். தோழிமீர்காள் - தோழிகளே. தன்நேர் இ(ல்)லாத - தனக்குத் தானே நிகரன்றி வேறு நிகரில்லாத. வென்றி - வெற்றி. தாசரதி - தசரதன்மகன். இன்னாத - துன்பமான. என்னே, அதிசய இரக்கக்குறிப்பு (தமிழகராதி). இங்கு - இந்தக் காட்டில்.

பொருள் புலப்படாத 'என்னேரிவ்வுலகத்தில்' என்ற பாடத்தை 'என்னே இவ்வுலகத்தில்' எனத் திருத்திப் பொருள்கொள்ளப்பட்டிருக் கிறது.

4 பையார்வெம் பணத்துலகிற் பழியாலே பழிமறைத்து
நெய்யாலே நெருப்பவிக்க நீணிலத்திற் கண்டறியேன்
கையார்வெஞ் சிலைதரித்த காகுத்த னிடைக்கண்டேன்
உய்யாரென் மாமிமா ரிவ்வுரைதஞ் செவியுறவே.

கொண்டுகூட்டு.—நீள் நிலத்தில் நெய்யால் நெருப்பு அவிக்கக் கண்டறியேன், பை ஆர் வெம் பணத்து (த்தலைமேலுள்ள) உலகில் பழியாலே பழி மறைத்து (-மறைத்ததனால்) கையார் வெம் சிலை தரித்த காகுத்தனிடைக் கண்டேன். இவ்வுரை தம் செவியுற என் மாமிமார் உய்யார்.

பொருள்.— உலகத்திலே (யாரும் நெருப்பை வளர்க்கும்) நெய்யினால் நெருப்பை அவிக்கக்கண்டறியாத யான், படத்தை யுடைய கொடிய (ஆதிசேடனென்னும்) பாம்பு (தாங்குதல்) உடைய பூமியிலே (இராவணனால் சிறைவைக்கப்பட்டவளென்ற தீய) பழியை (த் தீயிற்குளித்துக் கற்பை நிரூபித்ததனால் நீக்கிய மனைவி யை அனாதையாகக் காட்டில் விடும்படிசெய்து) பொல்லாப்பழியால் இராமன் மறைக்கமுயன்றதனால், அவனிடத்தில் (நெருப்பை நெய் யால் அவிக்கமுயல்வார் நெருப்பை வளர்த்தல்போலப் பழியால் பழியை ஒழிக்கமுயன்று பழிவளர்த்தசெயலைக்) கண்டேன். (இராமன் என்னைக் காட்டில்விட்டானென்ற) இந்த வார்த்தை தங்கள் காதிற்பட்டவுடனே (கோசலை முதலிய) என் மாமிமார் ஆவிதாங்கார்.

பை - படம். ஆர்தல் - பொருந்துதல். வெம் - கொடிய. பணம் - பாம்பு. மறைத்து - மறைத்ததனால்; காரணப்பொருளில்வரும் செய்து என்னும் வாய்பாட்டுவினை. உய்தல் - உயிர்வாழ்தல்.

5 தன்னெஞ்ச ராயென்னைக் காட்டில்விடச் சொன்னவரோ
வன்னெஞ்ச ராயதனுக் கிசைந்துவிட வந்தவரோ
நன்னஞ்சம் விழிக்கணிந்த நங்கைமார் நகைசெய்ய
இன்னஞ்சா காதிருந்த யானேநெஞ் சார்வலியார்.

கொண்டுகூட்டு:—கல்நெஞ்சராய் என்னைக் காட்டில்விடச் சொன்ன வரோ? வல்நெஞ்சராய் அதனுக்கிசைந்து (என்னைக் காட்டில்) விட வந்தவரோ? நல் நஞ்சம் விழிக்கு அணிந்த நங்கைமார் நகைசெய்ய இன்னம் சாகாதிருந்த யானோ? ஆர் நெஞ்சு வலியார்?

பொருள்: கல்நெஞ்சராய் (இரக்கமில்லாமல் கருப்பவதியான) என்னைக் காட்டில்விடும்படி கட்டளையிட்டவரோ? வன்மனத்தின ராய் அந்தக் கட்டளையை நிறைவேற்றுதற்கு உடன்பட்டு என்னைக் காட்டில்விட வந்தவரோ? (நான் காட்டில் விடப்பட்டதையறிந்து பரிகசித்து) மாதர்கள் சிரிக்கச் செத்துமடியாமல் உயிரோடிருக்கும் யானோ? (எங்களில்) யார் (மிகுந்த) கடினசித்தமுடையவர்?

நல் - நல்ல; (நல்லவெயிலென்பதிற்போலக்) கடுமையான என்ற பொருள் குறித்தது (தமிழகராதி). விழி - கண். அணிந்த - உவமானமான என்ற பொருள் குறித்தது. நங்கைமார் - பெண்கள். நகைசெய்ய - சிரிக்க.

'பெண்ணாகப் பிறந்தவர்களில் யான் அடைந்த பெருந் துன்பத்தை யாரடைந்தார்கள்?* இயல்பாக இளகியமனமுடைய இராமன், பழிக்கஞ்சி இறுகியமனமுடையவனாகி, என்னை ஆருமில் லாத தனிக்காட்டிலே கதறியழும்படி ஒரு துணையுமின்றித் தனிய ளாகவிட்டான்.† என் நாயகனைக் காட்டுக்கனுப்பும்படி கைகேசிக் குப்போதித்த கூனிபோல், என்னைக் காட்டுக்கனுப்பும்படி என் நாயகனுக்கு யார் போதனைசெய்தாரோ?' என்று சீதை பலவாறு கதறிப் புலம்பினாள்.

---

* பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துன்பம் யார்பட்டார்?
(இப்படலம் ௬௫.)

† கனிமனத்துக் காகுத்தன் கடலுலகிற் பழிக்கஞ்சித்
தனியொருத்தி யான் கதறத் தனிக்காட்டில் விடுவித்தான்
(இப்படலம் ௬௬)

இலக்குமணன் சீதையைத் தேற்றல்

இலக்குமணன், தானுற்ற கொடுந்துன்பத்தை ஒருவாறு மாற்றிக்கொண்டு சீதையைத் தேற்றுவானாகிக் கூறுகின்றான்.

'வினைப்பயன் விண்ணவராலும் விலக்குதற்கரியது. அதனை மண்ணவரால் மாற்றுதல் இயலாததென்பதைக் கூறவேண்டுமோ? உலகமுழுதும் ஒருகுடைக்கீழாக ஏகசக்ராதிபதியாக அரசாண்ட நளமகாராசன் விதிவசப்பட்டு நாடிழந்து மனைவியுடன் காடுசென்று அங்கே அவளைத் தனியேவிட்டுப் பிரிந்து சமையற்காரனாகி வருந்தினான். அரிச்சந்திரமகாராசன் மகனையும் மனைவியையும் விற்றுப் பறையனுக்கு அடிமையாகி இடுகாடுகாப்பவனானான். அறிவில்லார், இன்பமடையும்போது இறுமாந்தும் துன்பமடையும்போது சோர்ந்தும் இருப்பார்கள். அறிவாளிகளோ, இன்பமடைவதும் துன்பமடைவதும் முறையே முன்செய்த நல்வினை தீவினைகளின் பயன்களென்று கருதியிருப்பார்கள். நீ முன்செய்த நல்வினை, உன்னை இராமனோடு சேர்த்தது. அப்படியே, உன் தீவினை, அவனைவிட்டுப் பிரியச்செய்தது. நீ இப்போது செய்யத்தக்கது தவமே. முனிவர்களுக்குப் பணிவிடைபுரிந்து அவர்கள் போதிக்கும் நல்வழியில் வழுவாதொழுகி உன்நாயகனை எப்போதும் கருத்திலிருத்தித் தவஞ் செய்வதே உன்கருமமாகக் கொள்வாயாக' என்று இலக்குமணன் கூறினான்.

சீதை கூறல்

'உன் தமையனை நிழல்போலப் பிரியாதேனாய் அவனுடன் சென்று அடிபணிந்த முனிவர்கள் 'உன் கணவனைப் பிரிந்தகாரணம் யாது? என்று வினவுவார்களே. அவர்கள் வினவுக்கு நான் என்ன விடை கூறுவேன்? இப்போதைய என்னுடைய நிர்க்கதிக்குக்காரணம் என்வினையேயன்றி என்நாயகன் பிழையும் அன்று; நாட்டார் பிழையும் அன்று என்று உன்தமயனுக்கு உரைப்பாயாக. தீக்குளித்துத் தூயளாயுள்ள என்னைப்பற்றி உண்டான உலக வதந்திக்குப் பயந்து அவன் என்னைத்துறந்தான் (-கைவிட்டான்). அந்த வதந்தி, அவன் என்னைத் துறந்துவிட்டதனால்

ஒழிந்துவிடும். இனி நான் அவனைப் பிரிந்திருத்தலே (அவனுக்கும் எனக்கும்) சிறந்ததாம் என்பதையும் நான் கூறினேனென்று உன்தமையனுக்குத் தெரிவிப்பாயாக. நான் இரண்டுமாதம் கருப்பவதியாக இருப்பதை என் உடல் மாறுபாட்டைக் கண்டு தெரிவாயாக. இந்தக் கருப்பத்தின்விளைவு யாதாய்முடியுமோ' என்று கூறினாள்.

இலக்குமணன் அயோத்திக்குத் திரும்புதல்

இலக்குமணன், சீதையை அடிபணிந்து புறப்பட்டுக் கங்கையைக்கடந்து பின் நோக்கிப்பார்த்துப் பொருமிக்கொண்டு அயோத்தியைநோக்கிச் சென்றான்.

சீதை புலம்பல்

இலக்குமணன் போயேவிடுவானோ, திரும்பிவருவானோ வென்று தேர் மறையுமட்டும் பார்த்துக்கொண்டிருந்து அது மறைந்தவுடனே 'தேர் சென்றுவிட்டது. இனித் திரும்பிவாரான். என்னை அறவே கைவிட்டான்' என்று கதறத்தொடங்கினாள்.

6 இலங்கையிலே நெடுங்கால மிருஞ்சிறையி லேயிருந்து
புலம்பியழு தியான்பட்ட புல்லனவும் போதாமல்
தலங்குலவு பழிபூட்டித் தனிக்கானில் விடுவித்து
விலங்கரிய துயர்விளைத்த விதியேயோ விதியேயோ

கொண்டுகூட்டு: யான் இலங்கையிலே நெடுங்காலம் இரும் சிறையிலேயிருந்து புலம்பி அழுதுபட்ட புல்லனவு போதாமல் தலம் குலவு பழிபூட்டித் தனிக்கானில் விடுவித்து விலங்கரிய துயர்விளைத்த விதியேயோ, விதியேயோ.

பொருள்: நான் (மாற்றானான இராவணனால் அவனூராகிய) இலங்கையிலே (கொண்டுபோய்விடப்பட்டு, அங்கே) நெடுங்காலம் பெருஞ்சிறையிலிருந்து வருந்தி அழுதுபட்ட துன்பம் போதாமல் (அதிகமாகத் துன்பம்) அடையவேண்டுமென்று, என் சொந்த ஊராகிய) அயோத்தியிலே பழிச்சொல் உண்டாக்கி அது

காரணமாக (உறவினனான இலக்குமணனால்) தனியாகக் காட்டிலே விடப்படும்படிசெய்து நீங்காத துன்பத்தை உண்டாக்கிய விதியே!

இரும் சிறை - பெருங்காவல். புலம்புதல் - வருந்துதல் (தமிழகராதி). மெத்தனவும் மெத்தெனவும் மென்மைகுறித்தல்போலப் புல்லனவும் புல்லெனவும் புன்மைகுறிப்பவையாம். புன்மை - சிறுமை; துன்பம் (தமிழகராதி). பழிபூட்டி - (என்னைப்) பழிபூணச்செய்து, என்னைப் பழியடையச் செய்து. மாற்றானாகிய இலங்கை, மேலே கூறப்பட்டிருத்தலால், தலம் (-இடம்) அயோத்திநகரையும் கோசலநாட்டையும் குறிப்பதாகக் கொள்ளலாம். விலங்கு - விலகு - நீங்கு. துயர் - துன்பம்.

7 ஏதமுறு பழியூட்டி யிப்பிறப்பி லெனையொழிய
மாதரையேன் மனத்தாலும் தொடேனென்று வரந்தந்த
காதலனை மனங்கலக்கிக் காட்டிலெனை விடுவித்து
வேதனைநோய் செய்வித்த விதியேயோ விதியேயோ.

கொண்டுகூட்டு: ஏதம் உறு பழி ஊட்டி, இப்பிறப்பில் எனையொழிய மாதரை என்மனத்தாலும் தொடேனென்று வரந்தந்த காதலனை மனம் கலக்கிக் காட்டில் எனைவிடுவித்து வேதனைநோய் செய்வித்த விதியேயோ, விதியேயோ.

பொருள்: (என்மேல்) குற்றமான பழியை (அநியாயமாகச்) சுமத்தி, இந்தப்பிறப்பில் என்னையொழிய எந்தப்பெண்ணையும் (தேகத்தால் தீண்டுவதுகிடக்க) சிந்தையினாலும் தீண்டேனென்று (வேறெந்த மாதுக்கும் கிடையாத) வரந்தந்தருளிய (ஏகபத்தினி விரதனான) என்காதலனை மனங்கலக்கி என்னைக் காட்டில்விடும்படி செய்து வேதனைவிளைவித்த விதியே!

ஏதம் - குற்றம்; துன்பம்; கேடு (தமிழகராதி). பழி ஊட்டி - பழியை அடையும்படிசெய்து. துன்பம் என்ற ஒரேபொருளுடைய வேதனை நோய் என்ற இரண்டு வார்த்தைகள் சேர்ந்து மிகுந்த துன்பத்தைக் குறித்தன.

இராமன் ஏகபத்தினிவிரதனென்பது,

'வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்'

என்று இராமனுக்குத் தெரிவிக்கும்படி அனுமானுக்குச் சீதை கூறியதாக வரும் சூளாமணிப்படலப் பாட்டினாலும் துலங்கும்.

8 கண்ணறக்கா குத்தனெனைக் காட்டில்விடக் கண்டிருந்து
மண்ணகத்தார் வன்கொடுமை வாய்திறவா மானமிலாப்
பண்ணறைச்சி யென்றென்னைப் பழிதூற்றப் பண்ணுவித்தாய்
விண்ணவர்க்கும் வெலற்கரிய விதியேயோ விதியேயோ.

கொண்டுகூட்டு:—விண்ணவர்க்கும் வெ(ல்)லற்கரிய விதியே! மண்ணகத்தார், என்னைக் காகுத்தன் கண்ணறக் காட்டில்விடக்கண்டிருந்து, வன்கொடுமை வாய்திறவா மானமில்லாப் பண்ணறைச்சியென்று என்னைப் பழிதூற்றப் பண்ணுவித்தாய்.

பொருள்: விண்ணவரும் வெல்லுதற்கரிய விதியே! உலகத்தார், இராமன் என்னைத் தாட்சிணியமின்றிக் காட்டில்விட (அந்தக் கொடியசெயலைத் தடுக்காதிருந்ததல்லாமல் சந்தோடமாக)ப் பார்த்துக்கொண்டிருந்து, (இவள்) மானவீனமும் ஒழுங்கீனமுமுடையவளாயிருக்கிறாளென்று என்னைப்பற்றித் தங்கள் வன்கொடுமையான வாயைத்திறந்து பழிதூற்றப்பண்ணினாய்.

கண் - கண்ணோட்டம் - தாட்சணியம். கண் அற - தாட்சிணியம் நீங்க - தாட்சணியமில்லாமல். காகுத்தன் - ககுஸ்தவமிசத்தில் தோன்றிய இராமன். வாய்திறவா - வாய்திறந்து. பண்ணறை - அடைவுகேடு (தமிழகராதி). கண்ணற்றவள் - கண்ணறைச்சியென்றும், மூக்கற்றவள் மூக்கறைச்சியென்றும் கூறப்படுதல்போல், பண் (-தகுதி) அற்றவள் பண்ணறைச்சியெனப் பட்டாள்.

சீதையை வான்மீகிசீடர்கள் காணுதல்

'ஒருநாளும் நீங்காத காட்டுவாழ்வை யெனக்கு விதித்த விதியே! கணவன் கோபித்தவளைப் புக்ககத்தார் (=கணவன் வீட்டார்) கைவிடுவார்கள்; பிறந்தகத்தார் (-பிறந்தவீட்டார்)

பாதுகாக்கமாட்டார்கள்; அந்நியர்கள் அவமதிப்பார்கள். எங்கும் புகலிடம் காண்கிலேன். என் துன்பம் நீங்க, என் உயிர் போகவில்லையே!' என்று சீதை கதறிய ஓசை காதில்விழுந்த வான்மீகியின் சீடர்கள் அந்த ஓசைவழியேசென்று அவளைக் கண்டார்கள். கண்டவர்கள், இரங்கி விரைந்துதிரும்பி, 'ஒருவருமில்லாக்காட்டிலே பேரழகுடைய மாதொருத்தியைக் கண்டோம். அவள், விண்ணினின்று வழுவிவிழுந்த தேவலோகமாதோ, பூலோகமாதோ அறியோம். அவள், தனியளாய் அலறியழுகின்றாள்; அவளுக்கு அருள்செய்தல் அடிகளுக்கு (வான்மீகிக்கு) அடுக்கும் (-ஏற்றசெயலாகும்)' என்றார்கள்.

சீதை வான்மீகியின் பன்னசாலையைச் சேர்தல்

வான்மீகி, சீடரோடுசென்று சீதையைத்தேற்றி 'நீ சனகமகாராசன்மகளென்றும் தேவதேவனான இராமமூர்த்தியின் தேவியென்றும் ஞானதிருட்டியினால் தெரியலானேன். அவன் உன்னைக் காட்டில் விட்டானல்லன்; என்பாதுகாப்பில்விட்டான். இந்த இடம் எங்கள் ஆச்சிரமத்தின் எல்லையிலுள்ளது. தவமுதுமகளிர் உன்னைக்கண்டால், மகிழ்ந்து தங்களாச்சிரமத்துக்குக் கூட்டிக் கொண்டுபோய் ஆதரித்துப் பாதுகாப்பார்கள்' என்றான். அவள், அவனடி தொழுதாள். அவன் அவளுடன் தன் பன்னசாலையை அடைந்தான்.

தவமாதருக்கு வான்மீகி சீதைவரலாறு கூறுதல்

தவமாதர் வறியவர் பெருநிதிபெற்றாற்போலச் சீதையைக் கண்டு மகிழ்ந்து அவளுடைய வடிவழகைநோக்கி இவள் திருமகளோவென்று அதிசயித்தார்கள். அவர்களுக்கு 'இவள், மனுகுலம்விளங்கத்தோன்றிக் கடலணைகட்டி இலங்கைக்குச்சென்று இராவணாதி இராக்கதரை வென்ற தசரதராமனுடைய தேவி; அவன் இவளைத் துறக்க (—பற்றற்றுக் கைவிட) இங்கே வந்தாள்' என்று வால்மீகி அறிவித்தான்.

சீதை தவமாதரோடு தங்குதலும், இலக்குமணன் அயோத்தியை அடைதலும்

சீதை, தவமாதர் ஆதரித்துப்போற்ற அவர்களோடு வாழ்வாளானாள். இலக்குமணன் அயோத்தியை அடைந்து இராமனிடம் அவன் ஆணையை நிறைவேற்றியதை அறிவித்தான். அவன் நாட்டார் பழிகூறியதைக் கேட்ட அன்றையினும் அதிகமான வேதனை அடைந்தான்.

'துதியோ, பழியோ, கேட்டதை (ஆலோசனையின்றிக் கிளிப்பிள்ளைபோலக்) கூறும் உலகத்தோரையும் அவர்கள்கூற்றுக்கியைந்ததைச்செய்த உன்மதியையும் நோதல் தக்கதன்று. சீதையை நோதலும் தக்கதன்று; யாகாக்கினியினும் தூயவளான அவளையும் உன்னையும் (பிரியும்படி) விதித்த விதியினைநோதலே பொருந்தும்' என்று இலக்குமணன் தேற்ற, இராமன் தேறினான்.*

கஉ-வது சீதை வனம்புகுபடலம் முற்றிற்று

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௩உ௪	௧0	மாவி	மாதவி

---

* துதிபழி யிரண்டுங் கேட்டது சொல்லும் உலகையும் அதன்வழி ஒழுகும் மதியையும் நோவ அடாதுமா சனகன் மகளையும் நோவவிங் கடாதால் அதிகுண வதியாய் அழலினும் தூய அவளையும் உன்னையும் விதித்த விதியினை நோவ அடுக்குமென் றிளையோன் விளம்பிடத் தெளிந்தனன் வீரன்.

பண்டைத் தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

௲௪௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.

VI மேற்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் தமிழ் இடப்பெயர்கள்

ஆதியில் மனுக்குலம் ஒன்றேயானதுபோல மனுக்குலத்தவர்கள் பேசிய பாஷையும் ஒன்றேயாம் என்ற கொள்கை தற்காலம் அறிஞர்களுள் வரவர அதிக உறுதியாகிக்கொண்டிருக்கின்றது. இன்றைக்குப் பூமியெங்கும் வழங்குகின்ற பாஷைகளையெல்லாம் மொழிநூல்வல்லோர் இந்து-ஐரோப்பியம், செமிற்றியம், ஊறல்-அற்ருயிகம், கொளாறியம் அல்லது மூண்டா, திராவிடம், காமிற்றிகம், பந்து, காப்பிரியம், நூபியம் எனும் பெரும்பிரிவுகள் அல்லது குலங்களாய் வகுப்பர். இவற்றுள் இந்து-ஐரோப்பியப்பிரிவுள் அடங்கிய ஆரியம் ஆர்மீனியம் கிரேக்கம் சர்மனியம் ஆங்கிலம் ஆதிய மொழிகளையும், திராவிடக்குலத்துள் அடங்கிய தமிழ் கன்னடம் தெலுங்கு மலையாளம் ஆதிய மொழிகளையும் யான் ஒப்புநோக்கி, இந்து-ஐரோப்பியப்பிரிவும் திராவிடப்பிரிவும் ஒரே அடிகளில் (தாதுக்களில்) நின்று எழுந்தவைகளாம் என எனது "சொற்பிறப்பு, ஒப்பியல் தமிழ் அகராதி"யில் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காட்டிவருகின்றேன். இனி, கிரேக்கத்துக்கும் செமிற்றிய மொழிகளுள் ஒன்ருகிய எபிரேயத்துக்கும் ஒப்புமையிருப்பதைப் பிறர் தெளிவித்துள்ளார். எபிரேயமொழி மொன்கேமர் முதலான ஆஸ்திரிக்மொழிகளோடு சம்பந்தமுள்ளது என இவற்றுள் ஒன்ருகிய கோர்க்கு எனும் மூண்டாமொழிவிசேடத்தை ஆராய்ந்தோர் கூறுவர். ஊறல்-அற்ருயிக்மொழிகளும் இவ்வாறு ஒருபுடை பிறமொழிப்பிரிவுகளோடு ஒத்துநிற்கின்றன என்பர். உலகத்தின் மொழிகளெல்லாம் ஒரே அடியாய்ப்பிறந்தன என்ற முடிபை (Mono-genism) இத்தாலிதேசத்தும் அமெரிக்காவிலும் மொழிநூலாளர்பலர், பேராசிரியர் அல்பிறேடு துறேம்பற்றி (Alfredo Trombetti) என்பாரைப் பின்பற்றிச் சாதிக்கின்றனர். இவர்கள், உலகில் உள்ள பாஷைகளெல்லாவற்றையும் சீனத்தைப்போலத் தனியசைச்சொற்களைப் பெரும்பான்மைகொண்டனவும், தமிழைப்போல ஒட்டுச்சொற்களைப் பெரும்பான்மைகொண்டனவும், ஸம்ஸ்கிருதத்தைப்போல உருத்திரிந்த சொற்களைப் பெரும்பான்மைகொண்டனவுமாக உருவத்தைநோக்கி மூன்று பிரிவாக்கி, ஆதியில் தனியசையாய்மாத்திரம் நின்றசொற்கள் பின்பு வேறு

சொற்களோடு சேர்ந்து ஒட்டுச்சொற்களாகி அப்பால் உருத்திரிந்தன என்று காட்டி, ஆதித்தனியசைச்சொற்கள் உலகத்தின் சகலமொழிகளுக்கும் பொதுவேயாம் என்று நிலைநாட்டுவர். இந்த முடிபுதான் ஆராய்ச்சி நிரம்பும் ஒருகாலம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகும் எனத் தோன்றும்.

தமிழ் அடிச்சொற்களின் தோன்மை

சீனம் முதலிய சிலமொழிகள் தனியசைச்சொற்களைப் பெரும்பான்மை கொண்டவையென்றாலும், அச்சொற்கள் ஆதியுருவத்தோடு நின்றுவிட்டன வல்ல. எந்தமொழியும் காலவடைவில் மாறாமலிருத்தல் கூடாது. சரித்திர காலத்துக்குள்ளேயே பழந்தமிழ் என்ற ஒரேமொழி பிறகூயி கோண்டி கன்னடம் கோடம் குடகு கூர்க்கு மாற்றோ மலையாளம் ஒருவொன் தெலுங்கு தோட துளு ஆதிய வெவ்வேறு மொழிகளாய் மாறியிருக்கின்றது. தற்காலத் தமிழ்தானே கோடிக்கரையிலும் யாழ்ப்பாணத்திலும் எத்துணை வேற்றுமையாய்ப் பேசப்படுகின்றது! யாழ்ப்பாணத்திலும் ஊருக்கு ஊர் காலத்துக்குக்காலம் எத்துணை மாற்றம்! ஆகவே, தனியசைகளைக்கொண்ட பாஷைகளின் சொற்கள்தாம் மனிதபாஷையின் ஆதிச்சொற்கள் என்று சொல்லிவிடப்போகாது. ஆயின், எனது ஆராய்ச்சிக்கு எட்டிய அளவில், திராவிடமொழிகளுள் தலைமையான பழமையும் முதன்மையான திருத்தமும் பெற்றுள்ளதாகிய தமிழில் அவ் ஆதிச்சொற்கள் நுனித்துக் காணக் கிடக்கின்றன. தமிழ் தன் ஆதிச்சொற்களை ஒன்றுடனொன்றாக ஒட்டியும் வேறுசில* சூழ்ச்சிகளைக் கையாண்டும் சொற்களை விகற்பித்துக்கொண்டவிடத்திலும், அவ் ஆதிச்சொற்களின் பண்டையுருவத்தை வெகுவாய் மாற்றாதிருந்துவிட்டது எனத்தோன்றும். இதனால், விஞ்ஞானமுறையாய் அதாவது சொற்கள் உண்டாகிப் பலுகும் இயற்கை ரீதியைப் பின்பற்றித் தமிழை ஆராயும்போது, உண்மையான அடிச்சொற்களைக் காணலாம் என்பது நியாயத்துக்குப் பொருத்தமானதேயாகும். இவ்வாறு ஆராய்ந்துகண்ட தமிழ்த் தனியசைச் சொல்லடிகளைக்கொண்டு நோக்கும்போது, இவைகள்தாம், முன்சொல்லியவாறு, இந்து-ஐரோப்பியமொழிகளுக்கெல்லாம் அடிப்படையாயின என்றது வெளியாகும்.

---

* "சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதி"யிற் சொற்பிறப்புக் கட்டளைகள் காண்க (பக். XXV. தொடக்கம்).

ஆதலால், தமிழ்தான் ஆதிமனிதன்பாஷை என்று முடிப்போமா? அப்படி முடித்தல் ஒன்று, தமிழிலுள்ள அடிகளே பிறபாஷைகளுக்கும் அடிகளாயின என்று காணுதல் வேறொன்று. தமிழுக்கும் மற்றெல்லாப்பாஷைகளுக்கும் அடிகள் ஒன்றே எனில் யாவற்றுக்கும் பொதுவாய்நின்ற அந்த அடிகளே ஆதிமனிதன்பாஷையென்று முடிப்பது சாலும். தமிழ்தான் அந்த அடிகளை எளிதிற் பிரித்தெடுக்கத்தக்கதாய் விளங்குகின்றது என்றது மட்டுந்தான் நாம் தடையின்றித் துணியத்தக்க ஒரு முடிபு. வெகுதூரம் மாறுபடாது ஆதியடிகளைக் காத்துவைத்திருக்கும் சிலாக்கியத்தைக்கொண்டுள்ளது தமிழ். அவ்வடிகளை மிக மாற்றி மறைத்துவைத்துக்கொண்டிருப்பன ஏனைய பாஷைகள். இதுவே செவ்வனேசெய்யும் ஆராய்ச்சியாற் பெறப்படத்தக்க உண்மை. தமிழாவது வேறெம்மொழியாவது மனிதனின் ஆதிப்பாஷை எனச் சொல்ல அமையாததற்கு நியாயம் என்னவெனில், பூமுகத்தில் வழங்கும் பாஷைகள் அனைத்தும் திரிந்தும் விரிந்தும் பலவிதத்தில் விகற்பம் அடைந்திருத்தலே என்க.

தொடக்கத்தில் ஒன்றேயாயிருந்த மனுக்குலம் பூர்வகாலத்திலே பல குலங்களாய்ப் பரிணமித்து,நிறம் உடற்கூறு ஆதியவைகளில் வேறுகிவிட்டது போல, ஆதியில் ஒன்றுப் அடிச்சொற்களால்மாத்திரம் இயன்றதாயிருந்த பாஷையும் மிகப் புராதனமானகாலத்தில் சொல்லுருவம் வசனக்கட்டு முதலியவைகளில் வெவ்வேறுகுலங்களாய்ப் பிரிந்துபோயினமை ஆச்சரியமன்று. உலகிலுள்ள எல்லாச்சாதிக்குலங்களையும் ஒத்த இயல்புகள் பலவற்றைக்கொண்டு நாம் ஒரேமனுவின்மக்கள் என்பதுபோல, அகிலபூமியிலும் வழங்கும் சகலபாஷைகளையும் ஆதியடிகளைக்கொண்டு நோக்கி அவையெல்லாம் ஒரு மனிதபாஷையே என்பது பொருந்தும். மனிதருள் காணப்படும் நிறம் முதலிய பேதங்கள்பற்றி அன்னோரை இந்தியர் ஐரோப்பியர் சீனர் காப்பிரிகள் முதலான சாதிக்குலங்களாய்ப் பிரிப்பதுபோல, அவ்வப் பாஷைக்கூட்டங்கள் அடைந்துகொண்ட சொல்விகற்பம் இலக்கணச்சிறப்பமைதிகள்பற்றி அவற்றைப் பலமொழிக்குலங்களாய்ப்பிரிப்பதும் பொருத்தமுடையதேயாம்.

இனி, சாதிக்குலமும் மொழிக்குலமும் பண்டைநாட்களில் ஒரே பெயர் உள்ளனவாயிருத்தலையும் நோக்குக. தமிழ்க்குலத்தவருடைய பாஷைக்குத்

தமிழ் எனும் மொழிக்குலப்பெயர் உண்டாயிற்று. பிற்காலம் சிலவிடங்களில் ஒருசாதிக்குலத்தவர்கள் தங்களுக்குரிய மொழியை விட்டு வேறொரு மொழியை மேற்கொண்டதும் உண்டு. ஆயினும், பண்டைக்காலத்தில் சாதியும் மொழியும் ஒன்றாயிருந்து ஒரேபெயராற் குறிக்கப்பட்டன. இவ்வாறே சர்மனியருடைய சாதிக்கும் பாஷைக்கும் பெயர் ஒன்றே. சீனருடைய சாதிக்கும் பாஷைக்கும் பெயர் ஒன்றே. பெரும்பான்மை தேசப்பெயரினின்று சாதிப்பெயரும் சாதிப்பெயரினின்று பாஷைப்பெயரும் வந்திட்டமையை முன்னர்க் குறித்துள்ளோம்.

பழைய இடப்பெயர்கள் பழங்குடிகளுக்குச் சாட்சி

பூர்வகாலத்திலே ஒருதேசத்தில் வசித்திருந்தோர் அத்தேசத்தின் ஆறு மலை ஊர் ஆதியவற்றிற்கு இட்டுவழங்கியபெயர்கள் சில எந்நாட்சென்றும் அங்கங்கே நிலைத்திருத்தலைக் காண்கின்றோம். ஓர் தேசத்தில் சிறிது சிறிதாய்ப் பழங்குடிகளைத் துரத்திவிட்டு உட்புகுந்த புதுக்குடிகள், முற்காலம் ஆறு மலை ஊராதியனகொண்டிருந்த பெயரையே பலமுறையும் கைக்கொள்வோராயினர். முந்தியிருந்தவர்களின் பாஷை வேறாயிருப்பின் அப்பாஷையால் அன்னோர்வழங்கிய அப்பெயர்களைப் பிந்திவந்தோர் தங்கள் பாஷைக்கேற்பத் திரித்துவழங்குவது இயல்பு. இவ்வாறே சிந்து எனும் தமிழ்ச்சொல்லாற் பெயர்பெற்ற வடஇந்திய ஆற்றை ஆரியர் ஸிந்து (Sindhu) என வழங்கியதைக் காண்கின்றோம். அப்பெயர் தமிழ் ஆதலால் ஓர்காலம் அப்பாகங்களிலிருந்த தமிழரே அதனை அவ்வாற்றிற்கு இட்டு வழங்கினர் என்பது வெளியாகும். இப்படியே விந்தியமலைப்பெயரும். விந்தியம் என்றது விண்டு எனும் தமிழ்ச் சொல்லின் மரூஉ. விண்டு = விளங்குவது. விலங்கல் என்ற சொல்லும் விளங்குதலைக்காட்டி மலையை உணர்த்தும். வெள்ளிடை விலங்கல் என்ற தொடரையும் நோக்குக. விண்டு எனும் தமிழ்ச்சொல்லை ஆரியர் உரிச்சொல் அடைகொடுத்து விந்திய (Vindhya) என மாற்றி மேற்கொண்டனர். நாகபுரம் என்ற ஊர்ப்பெயரும் நாகர் வசித்த பிரதேசத்தைக் காட்டும். நாகம் = நகர்ந்துசெல்லுவது; பற்றிப் பற்றிப் போவது. இச்சொல்லைப்போலவே நகுலம் = ஊர்ந்துசெல்வது, கிரி; நகம் = விரிவது, வளர்வது, உகிர்; நகிலம் = விரிவது, பொருமுவது,

ஸ்தனம்; நகுதல் = விரிதல், சிரித்தல். நக்குதல் = அண்டிவரல், தொடுதல்; நகைவர் = அண்மையிலுள்ளோர், நண்பர் என்றற்றொடக்கமான இளைச்சொற்கள் பல "நக்" எனும் அடியினின்று பிறக்கின்றவைகளாய்த் தமிழிற் காணப்படுகின்றமையால், நாகம் எனும் சொல் தமிழ் என்பதில் மயக்கமில்லை. இன்னும் இவ்வாறே பல இடப்பெயர்கள் வட இந்தியாவில் ஆங்காங்கு நிலவுகின்றமை தமிழர் ஒருகாலம் இந்தியாமுழுதும் பரந்திருந்ததற்கு உள்ள பிரபலமான சாட்சிகளுள் ஒன்றாகும்.

இன்றைக்கு முழுதும் தமிழ்நாடாக விளங்குகின்ற வடஇலங்கை முற்காலம் சிங்களநாடாயிருந்தது என்பதற்குத் திறம்பாத சாட்சி என்ன? வடஇலங்கையின் நீர்நிலைகள் வாய்க்கால்கள் திடர்நிலங்கள் வயல்கள் புலங்கள் சிற்றூர்கள் எல்லாம் பத்துக்கு ஒன்பதுவீதம் சிங்களப்பெயர்கொண்டிருப்பதுதானன்றோ? பொக்கணை, யாமா, கட்டுவ எனும் நீர்நிலைப்பெயர்களும்; கொட, ஒட (தங்கொடை அம்பலாக்குடை) ஆல (சில்லாலை, அரியாலை) ஆதிய குள வாய்க்காற்பெயர்களும்; வில், வில (இணுவில், கோண்டாவில், கொக்குவில்) எனும் வயல்வெளிகளைக்காட்டும் பெயர்களும்; தூவ (கப்புது, சவரன்து), பராப (உரும்பிராய, வேலம்பிராய) ஆதிய திட்டியைக்குறிக்கும் பெயர்களும்; பொத்த (சிமிளாம்பத்தை, அம்பலம்பற்றை) எனும் சமநிலங்களைக்காட்டும் பெயர்களும்; வல்ல (சுதுமலை, அனுவலை, வலிகாமம்) ஆதிய மணற்பூமியைக் குறிக்கும் பெயர்களும்; ஹிட்டிய, லய, மன, மான, மனை, பான, பாய, எஸ்ஸ, பத்தன பொத்தான ஒறுவ (போயிட்டி, பலாலி, வதிரமனை, ஆக்கமானை, அம்பனை, கருகம்பானை, மானிப்பாய், வலச்சை, சங்கடப்பத்தனை, சடையப்பெற்றுளை, வெள்ளுருவை) ஆதிய இடப்பெயர்களுமாகப் பல்லாயிரம் சிங்களப்பெயர்கள் இன்றைக்கும் பலவாறு மருவிவழங்குகின்றன.* இப்பெயர்களை அவ்வவ்விடங்களுக்கு இட்டவர்கள் பின்னுளில் தென்னிந்தியாவிலிருந்துவந்து குடியேறியிருப்போராய் இன்றைக்கு யாழ்ப்பாணத்துக்குரியவர்களாயுள்ள தமிழரல்லர்; இவர்களுக்கு முன்னிருந்த சிங்களவரே என்றது இவைகள் எல்லாம் சிங்களமாயிருத்தலால்

---

* யாழ்ப்பாணத்து இடப்பெயர்களின் வரலாற்றை "யாழ்ப்பாண வைபவ கௌமுதி"யின் ஈற்றிற் காண்க.

கரதலாமலகமாகும். ஆயின், இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளின்முன் இலங்கையில் சிங்களவர் என ஒருசாதியார் இல்லையன்றோ? இங்கு முன்னிருந்த யக்கர் நாகர் தேவர் என்ற முப்பிரிவினருமான தமிழரன்றோ விஜயராசன்வருகைக்குப்பின் சிங்களவராயினர்? எனச் சரித்திர ஆராய்ச்சியாளர் வினவுதல்கூடும். அதற்கு விடை என்னவெனில், பழந்தமிழரே சிங்களவராயினார் என்றது உண்மை. தற்காலத்துச் சிங்களவர் சிலர் தங்களை ஆரியர் என்று காட்டிப்போட முயற்சிப்பதெல்லாம் வீண். சிங்களவர் திராவிடரே என்பது நிச்சயம். வடஇந்திய வெற்றியாளர்கள் (விஜயன்) வந்தபின் அந்த வடஇந்தியரோடு கலந்துகொண்ட தமிழரே சிங்களவர் என்றால் அதற்குச் சம்மதம். ஆயின் அந்த வடஇந்தியர் யார்? அவர்களும் அடிப்படையில் திராவிடரே என்பது ஆராய்ச்சிவல்லோர் அபிமதம். சிங்களவர் உள்ளநாளெல்லாம் பேசிவரும் பாஷை அடிப்படையில் அதாவது வசனக்கட்டிலும் இலக்கண அமைப்பிலும் தமிழேயாம். இடையில் மேற்கொண்ட சொற்கள்மட்டும் நூற்றுக்கு எழுபது பாளியிலும் ஸம்ஸ்கிருதத்திலும் நின்று வந்திருக்க, நூற்றுக்கு முப்பது இன்றும் பழந்தமிழாகவே நிலவுகின்றன. முன்சுட்டிய இடப்பெயரெல்லாம் இன்றைய யாழ்ப்பாணவாசிகள் வருமுன் இலங்கையில் வழங்கிய பழந்தமிழே. அப்பழைய பாஷையின் பெயராகிய ஈழம் என்பதைச் சிங்களவர் இன்றைக்கும் எலு என வழங்குகிறார்கள். புதுத்தமிழராகிய யாழ்ப்பாணத்தாரின் வருகைக்கு முன் வடஇலங்கையில் பழந்தமிழரான சிங்களர் குடியேறியிருந்ததற்கு அப் பழந்தமிழிலுள்ள இடப்பெயர்களெல்லாம் ஒருவாய்ப்படச் சாட்சிபகருகின்றன.

[தொடரும்]

மதிப்புரை

[தருமதீபிகை:— இது ஒரு மாதவெளியீடு. இதன் ஆசிரியர் ஸ்ரீ கவிராஜபண்டிதர் செகவீரபாண்டியனாராவர், இவ்வாசிரியர் தாம் ஆயிரம் வெண்பாக்களால் நூறு அதிகாரங்களுடையதாக இயற்றிய தருமதீபிகை என்ற நூலிலிருந்து மாதந்தோறும் சில அதிகாரங்கள் இதில் வெளியிட்டு வரப்பெறும். இதன் வருடச்சந்தா ரூபா ஐந்து. மதுரை மேலமாசிவீதி 127 நிர். வீட்டிலுள்ள திருவள்ளுவர்நிலையத்திற் பெறலாம்.]

இதன் முதற்றொகுதியின் முதற்புத்தகம் இப்பொழுது வெளிவந்துளது. இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட இனிய முகவுரையால் இந்நூலின் இயல்பெல்லாம் அறியலாம். அவை நால்வகை உறுதிப் பொருள்களையும்பற்றி மக்கள் அறிந்தொழுகுதற்கேற்ற பொருள் விசேடங்களாகும். இம்முதற்புத்தகத்தில் மனிதன்நிலை, உடல்நிலை, பசி, பழக்கம் என நான்கதிகாரங்களில் அவற்றின் இயல்பு முதலியனபற்றிய நாற்பது வெண்பாக்களும் அவற்றின் விளக்கமான தெளிவுரைகளும் அதிகாரந்தோறும் இறுதியில் ஒவ்வொரு வெண்பாவின் முடிவுரைகளும் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்நூல் முழுதும் வெளிவந்தால் பல நூற்பொருள்களை அறியவிரும்பும் தமிழறிஞர்க்கு ஒரு விருந்துணவாயிருக்குமென்று தோன்றுகிறது.

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற நாற்பதுவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு நாற்பதாந்தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, 41-ஆம் தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது சுபானுஸு மார்கழிமீ 15உக்குள் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்துவரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகின்றார்கள்.

குறிப்பு:— 41-ஆம்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது சித்திரபானுஸு மார்கழிமீ 10உக்குள் இச் சங்கமாபீசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வராவிட்டால் 41-ஆம் தொகுதியின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனைப் பெற்றுக்கொள்ளாது திருப்பிவிடுவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயைசெய்து வி. பி. யைப் பெற்றுக்கொண்டு செந்தமிழை ஆதரித்துவருமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

லக்ஷ்மீ நாராயணையர்,
மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பதாந்தொகுதி.

Volume 40.

சித்திரபானு—சுபானு—௵

1942—1943

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

மதுரை.

நாற்பதாந்தொகுதியின் உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அருளிச்செயற் பாட அமைதி:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப், வித்வான் மு. இராகவையங்காரவர்கள்	கூ, சஎ, க0ரு, உஎங, ஙகங
அனுதாபக்குறிப்பு:—	பத்திராசிரியர்	கூக
இசைக்கிரமம்:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்	ஙங
இலக்கியழும் சழகழும்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.	ஙஉகூ
என்பெருந்தெய்வம்:—	ஸ்ரீ. E. S. வரதராஜையரவர்கள்	கஎரு
ஏரகமென்பது சுவாமிமலையா ?:—	ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள்	ஙசுங
ஒரு தனிப்பா:—		உஉகூ
கண்ணகிமணம் மறையோர்மன்றலா? காதற்கற்பா ?:—	ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள் M.A., B.L.	உககூ
கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்:)—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C.	ருஎ, கககூ, கஙங, கசுரு, உ0ரு, உஙங, உகூங, ஙஉக, ஙசுரு, ஙஅகூ.
கனகசபைப்பிள்ளை (திரு. வி.):—	ராவ்ஸாஹிப். திரு. S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B A., B,L.	ககூஎ
குண்டலகேசியின் வரலாறு:—	ஸ்ரீ. என். ஐயாஸ்வாமி சாஸ்திரியவர்கள்	கூங
குணத்தால் விளையும் நகைச்சுவை:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A. B.L.,	கககக
சிலப்பதிகார வழக்கவொழுக்கங்கள்:	ஸ்ரீ. ராவ்ஸாஹிப் வித்துவான் மு. இராகவையங்காரவர்கள்.	ஙஎசு
செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:—		உ0, சகஉ
செய்ந்நன்றியறிதலும் கம்பரும்:—	ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள்	உசக, உஅங, ஙசரு
தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—		உசுக
தில்லிமாநகர்த் திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்	க

தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வான்முறை:— ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள் ௭௩

நக்கீரரும் கருத்துரிமைப் புலமையறமும்:— ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A., B.L. ௧௬௯

நம் தேவை:— ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A. B.L., and ஸ்ரீ. R. கோபாலையரவர்கள் (சென்னைச்சருவகலாசங்க உயிர்நூற்பேராசிரியர்) ௧௨௫

பண்டைத்தமிழர்:— சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர். ௨௧, ௮௧, ௧௮௫, ௨௬௩, ௩௩௫, ௪௦௫

பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான் மு. இராகவையங்காரவர்கள் ௬௫

பிழைதிருத்தம்:— ௩௨௦, ௪௦௪.

மஹாமஹோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர்:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L. ௬

மணிமேகலையின் காலமும் அதை இயற்றிய புலவரும்:— ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள் M.A., B.L. ௩௦௧

மதிப்புரை:— ௩௦, ௯௨, ௧௦௪, ௧௭௪, ௨௨௯, ௩௭௭, ௪௧௧

மதுரைக்காஞ்சி:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான் மு. இராகவையங்காரவர்கள் ௧௫௭

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ௨௩௧, ௨௫௯

மன்னனும் மன்னுயிரும்:— ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள் ௧௩௯

வில்லிபுத்தூரார் காட்டிய வீரநெறிகள்:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான் மு. இராகவையங்காரவர்கள் ௩௫௩

அநுபந்தம்.

ஆங்கிலக்கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:-பகுதி 11-ல் பக். 1-8

நூல்.

[முற்றுப்பெற்றது.]

திருமுருகாற்றுப்படை பழையவுரை முகவுரை முதலியன:- ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L. (பகுதி. ௧—௫)

பொருளுரை வழங்கியோர் பெயரும் பொருளுரைகளின் பெயரும் பக்கமும்

ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. மயிலாப்பூர்.

and

ஸ்ரீ. R. கோபாலையரவர்கள், சென்னைச் சருவகலாசங்க உயிர் நூற்போசிரியர்.

நம் தேவை ... ... கஉரு

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான். மு. இராகவையங்காரவர்கள், இராமநாதபுரம்.

அருளிச்செயற் பாடவமைதி கூ, சஎ, க0ரு, உஎங, ஙகங
சிலப்பதிகார வழக்கவொழுக்கங்கள் ... ஙஎகூ
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ... சாரு
மதுரைக்காஞ்சி ... ... கருஎ
வில்லிபுத்தூரார் காட்டிய வீரநெறிகள் ... ஙருங

ஸ்ரீ. N. ஐயாஸ்வாமி சாஸ்திரியாரவர்கள், ஸ்ரீவேங்கடேசுவர கீழ்த்திசைக் கலைக்கழகம், திருப்பதி.

குண்டலகேசியின் வரலாறு ... கூங

ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.

ஏரகமென்பது சுவாமிமலையா? ... ஙசாங

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C. வெள்ளகால்.

கம்பராமாயணசாரம் ருஎ, ககக, கஙங, கசாரு, உ0ரு, உஙங, உகூங, ஙஉக, ஙசாரு, ஙஅகூ

ஸ்ரீ. சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர், யாழ்ப்பாணம்.

பண்டைத்தமிழர் உக, அக, கஅரு, உசாங, ஙஙரு, ச0ரு.

ஸ்ரீ. ஜே. நாராயணசுந்தரமையங்காரவர்கள், இராமநாதபுரம்.

செய்ந்நன்றியறிதலும் கம்பரும் உசக, உஅங, ஙசரு
மன்னனும் மன்னுயிரும் ... ... கஙகூ

ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள் M.A., B.L. பசுமலை.

கண்ணகிமணம் மறையோர்மன்றலா?
காதற்கற்பா? ... ... உககூ
நக்கீரரும் கருத்துரிமைப் புலமையறமும் கசுகூ
மணிமேகலையின் காலமும்
அதை இயற்றியபுலவரும் ... ஙOக

ஸ்ரீ. E. S. வரதராஜையரவர்கள், ஆசிரியர், அண்ணாமலை பல்கலைக்கழகம்.

என் பெருந்தெய்வம் ... ... கஎரு

ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள், இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்.

இசைக்கிரமம் ... ... ஙங
தில்லிமாநகர்த் திருவமர்மார்பன் திருக்கோயிற்
காட்சி ... ... க
தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு
வடநாட்டிற் பரவிய வான்முறை. ... எங

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்.

இலக்கியமும் சமூகமும் ... ... ஙஉகூ
கனகசபைப்பிள்ளை (திரு. வி.) ... ககூஎ
குணத்தால் விளையும் நகைச்சுவை ... ககக
மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர் சு

அநுபந்தம்.

திருமுருகாற்றுப்படை முன்னுரை I—XXV
,, சொற்றொடாகராதி முதலியன 45—62

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கனாநல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	*திருச்செந்திற்கலம்பகம்			
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	*நரிவிருத்தம்			
21	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	*பாண்டியம்			
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	*வேளிர்வரலாறு			
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	*சந்திரகுப்தன்			
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ. 4—8—0. இதுவரை 40 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்,

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.